(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 119.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2011 செத்தெம்பர் 06, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0040/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) கடந்த பத்து வருடங்களாக இலங்கை அரசாங்கத்திற்கு கடன் வழங்கிய நாடுகளின், சர்வதேச நிதி நிறுவனங்களின் அல்லது வங்கிகள் மற்றும் தனியார் துறையினர்களின் பெயர்களை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) இன்றுள்ளவாறாக இக்கடன்களின் மொத்த நிலுவைத் தொகையினையும்,

(iii) 1999 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்த கடன்களின் மொத்த நிலுவைத் தொகையினையும்,

(iv) 1999 இலிருந்து இற்றை வரையில் நாடுகளினால் அல்லது நிறுவனங்களினால் கடனாக வழங்கப்பட்ட தொகையினை வருடாந்த அடிப்படையிலும்,

(v) வட்டி வீதத்தினையும் திருப்பிச் செலுத்தும் கால அளவினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் திருப்பிச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகையை (வட்டியும் முதலுமாக), இற்றைவரையில் எடுக்கப்பட்ட கடன்களுடனும் வருடாந்த அடிப்படையிலும்,

(ii) மேற்குறிப்பிட்ட தகவலினை அமெரிக்க டொலர்களிலும் விசேட மீள்பெறல் உரிமை அளவிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1113/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் நிறுத்திவைக்கப்படும் வாகனங்களிலிருந்து கட்டணங்கள் அறவிடப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களிலிருந்து கட்டணங்கள் அறவிடப்படும் இடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த ஓர் இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள வாகனத் தரிப்பிட கட்டண அறவீட்டாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்கூறிய இடங்களில், மருதானை பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனத் தரிப்பிட கட்டண அறவீட்டாளர்களுக்கு மேலதிகமாக வேறு நபர்களும் திடீரென வந்து அங்கு நிறுத்தப்பட்டிருக்கும் வாகனங்களிலிருந்து கட்டணங்களை அறவிடுகின்றனர் என்பதையும்;

(ii) அந்த இடத்தில் நிரந்தர சேவையில் ஈடுபடுத்தப்பட்ட திருமதி. எச். டீ. அசோகா மேற்கூறிய விடயம் தொடர்பாக அதிகாரிகளிடம் விசாரித்ததன் காரணமாக தற்போது இவர் வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஈ) (i) திருமதி. அசோகாவை அவ்வாறு இடமாற்றுவதற்கான காரணம் என்னவென்பதையும்;

(ii) அந்த இடமாற்றத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1141/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 சனவரி மாதத்தில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இதன் கீழ் ஒரு குடும்ப அலகிற்கு கிடைக்கின்ற நிதியுதவியின் அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கிழக்கு மாகாணத்தில் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் எதிர்பார்ப்புடன் அரசாங்க ஊழியர்களின் ஒரு நாள் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் மூலமாக அரசாங்கம் ஈட்டிக்கொள்ள எதிர்பார்க்கின்ற பணத்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெள்ளப் பெருக்கினால் இடம்பெயர்ந்த மக்களுக்காக அரசாங்கம் நிதியேற்பாடுகளை ஒதுக்கியுள்ள வேளையில் அரசாங்க ஊழியர்களின் ஒரு நாள் சம்பளத்தை அதற்காகப் பெற்றுக் கொள்வது நியாயமற்றது என்பதையும்;

(ii) வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் கணிசமான எண்ணிக்கையுடைய அரசாங்க ஊழியர்களும் உள்ளடங்குவதால் அவர்களின் பணத்தையே அறவிட்டு அவர்களுக்கே வழங்குவது வெற்றிகரமான வேலைத்திட்டமல்ல என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்கிறாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1145/ '11

4\.

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் வரையில் அரசாங்கத்தினால் தென் கொரியாவுக்கு அனுப்பப்பட்ட இலங்கையர்களின் எண்ணிக்கை, வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) இவர்களில், பயிற்றப்பட்ட ஊழியர்கள் மற்றும் பயிற்றப்படாத ஊழியர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தென்கொரியாவுக்கு தொழில்வாய்ப்புக்காக அனுப்பி வைக்கப்படுகின்ற நபரொருவருக்கான விமானப் பயணச்சீட்டின் பெறுமதி யாதென்பதையும்;

(ii) மேற்படி பெறுமதியில் நபரொருவரிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) அரசாங்கம் வழங்கிய பங்கு யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1253/ '11

5\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக உயர்கல்வி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1564/ '11

6\.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் கீழுள்ள அரசாங்க விடுதிகளின் எண்ணிக்கை தனித் தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) குடியிருப்பதற்காக மேற்படி விடுதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவர்கள் யாரென்பதையும்;

(iii) விடுதிகளைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவர்களுக்கு மேற்படி விடுதிகள் ஒதுக்கப்படுவதை அங்கீகரிக்கின்ற அதிகாரி யாரென்பதையும்;

(iv) மேற்படி விடுதிகளுக்கான மாதாந்த வாடகை எந்த அடிப்படையில் அறவிடப்படுகின்றதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1070/ '11

7.

கௌரவ.ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்து வருடங்களில்,

(i) க.பொ.த (சா.தா) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையையும்;

(ii) பரீட்சையில் சித்தியடைந்தோர் சதவீதத்தையும்;

(iii) கணிதம், சிங்களம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்தோர் சதவீதத்தையும்

தனித்தனியாகவும் வருடவாரியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அரசாங்கப் பாடசாலைகளில் கல்வித்தரம் ஏன் குறைந்திருக்கின்றது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கடந்த ஐந்து வருடங்களில் கல்விக்காக செலவிடப்பட்டுள்ள மொத்த தொகையை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1114/ '11

8.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் மாகாணத்தில் கல்வி அமைச்சின் கீழ் காணப்படும் பாடசாலைகளில் ஆசியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பதற்காக 2007ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் 2010ஆம் ஆண்டு யூலை மாதம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் போது சம்பந்தப்பட்ட பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளுக்கு மேலதிகமாக பரீட்சார்த்திகளுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதன்பொருட்டு கடைப்பிடித்த முறைமையியல் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2007ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளை கவனத்திற்கொள்ளாது குறைந்த புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளுக்கு தற்போது நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறு குறைந்த புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1142/ '11

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெரவலப்பிட்டிய வரை எரி எண்ணெய்யை கொண்டுசெல்வதற்காக கடலின் ஊடாகச் செல்லும் குழாய் வழி நிர்மாணிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இக் குழாய் வழி ஆரம்பிக்கப்படும் இடம், முடிவடையும் இடம் மற்றும் மொத்த நீளம் ஆகியவை யாவை என்பதையும்;

(iii) இதை நிர்மாணிப்பதற்குச் செலவாகிய பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) இந்நிதியைப் பெற்றுக் கொண்ட முறை யாதென்பதையும்;

(v) இக் குழாய் வழியை நிர்மாணிக்க அனுமதி வழங்கிய நபர் அல்லது நபர்கள் யாவர் என்பதையும்;

(vi) தற்போது இக் குழாய் வழி உரிய விடயத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1254/ '11

10.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக தேசிய மொழிகள், சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1423/ '11

11\.
கௌரவ அஜித் குமார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் சுற்றுலா சபைக்காகச் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) இக்காணிகள் தற்போது வழங்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) இக்காணிகளுக்காக கிடைக்கப்பெற்றுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) காணிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்திட்டத்திற்குமுரிய நபர்கள், கம்பனிகள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நபர்களுக்கு, கம்பனிகளுக்கு அல்லது நிறுவனங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படை யாதென்பதையும்;

(vi) இக்காணிகளில் தற்போது உரிய கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில் அவை யாவையென்பதையும்

அவர் தனித்தனியாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1072/ '11

12\.
கௌரவ.ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 25000 தாதியர் சேவையில் ஈடுபட்டுள்ளவேளையில்,வெளிநாட்டு தாதியர் இலங்கையில் தொழில் செய்வதற்கு ஏன் அனுமதிக்கப்படுகின்றனர் என்பதையும்;

(ii) தனியார் வைத்தியசாலைகள் தமது தேவைகளுக்காக தாதியர்களை பயிற்றுவிக்க முடியுமாவென்பதையும்;

(iii) அரசாங்கத்தால் தாதியர் காப்புறுதி செய்யப்படுகின்றார்களா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1115/ '11

13\.
கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கல்வியில் தர ரீதியான ஒரு அபிவிருத்தியை உருவாக்குவதற்காக ஆசிரிய ஆலோசகர்கள் அளப்பரிய சேவை ஆற்றுகின்றார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆசிரிய ஆலோசகர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக பின்பற்றப்படும் நடைமுறைகள் யாவை என்பதையும்;

(ii) இவர்களுக்குரிய சலுகைகளும் கொடுப்பனவுகளும் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) சேவையில் திருப்திகரத்தன்மையை ஏற்படுத்தி ஆசிரிய ஆலோசகர்களிடமிருந்து மேலும் பயனுள்ள சேவையினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஆசிரிய ஆலோசகர் சேவையொன்றை தோற்றுவிப்பதற்கும்;

(ii) அதன் மூலம் இவர்களின் சேவையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும்

நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1143/ '11

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் ஏற்பட்ட தேங்காய் பற்றாக்குறையை நீக்குவதற்கான தற்காலிக பரிகாரமாக, தேங்காய் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானத்தின்படி தேங்காய் இறக்குமதி செய்த நாடுகள் யாவை என்பதையும்;

(ii) அதன் கீழ் இற்றை வரை இறக்குமதி செய்துள்ள தேங்காய்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கேரளாவிலிருந்து இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகைத் தேங்காய்கள் அழிக்கப்பட்டதா அல்லது அழிக்கப்படுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் தேங்காய்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இறக்குமதி செய்த தேங்காய்களை அவ்வாறு அழிப்பதற்கு முடிவு செய்யப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அத் தேங்காய்களை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1255/ '11

15.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

கைத்தொழில் பிணக்குகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

நீதி அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

சுற்றாடல் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 32 (2) (ஏ) ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2009 நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 1627/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

கரையோரம் பேணல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* 5.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 யூன் மாதம் 29 ஆந் திகதிய 1660/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 மார்ச்சு மாதம் 24 ஆந் திகதிய 1646/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010 மார்ச்சு மாதம் 24 ஆந் திகதிய 1646/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 8.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.4),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதிய 1589/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.5),— 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 1617/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

சுகாதார அமைச்சர்,— உணவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.6),— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதிய 1694/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 12.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 13.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 18.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 19.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 21.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 22.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 23.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

25.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

26.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0668/ ’10

1.

கௌரவ அநுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) கடந்த 5 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு வருடத்திலும்,

(i) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மா, சீனி, பழங்கள், பலசரக்கு பொருட்கள் உள்ளிட்ட அனைத்து உணவுப் பொருட்களினதும் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி பொருட்கள் எந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்,

(iii) இவற்றை இந்நாட்டினுள் இறக்குமதி செய்த நிறுவனங்கள் மற்றும் நபர்கள் யாவர் என்பதையும்,

(iv) இந்நாட்டில் தரையிறக்கிய போது ஒவ்வொரு உணவுப் பொருளினதும் பெறுமதி யாதென்பதையும்

தனித்தனியே அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0858/ '10

2.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மேல், சப்பிரகமுவா, வடமேல், மத்திய, ஊவா, வடமத்திய, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் மத்திய அரசு மற்றும் மாகாண சபைக்குரிய பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நிலுவைச் சம்பளங்கள் செலுத்தப்பட இருக்கின்றதா என்பதை அவர் ஒவ்வொரு மாகாணத்துக்கும் அமைய வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அல்லது நிலுவைச் சம்பளங்கள் செலுத்தப்பட இருப்பின் 2010.01.01 ஆந் திகதியாகும் போது, அந்தந்த மகாகாண அடிப்படையில் ஆசிரியர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைப் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி நிலுவசைச் சம்பளத்தை செலுத்துவதற்கு அரசினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறு ஒதுக்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) நிலுவைச் சம்பளங்கள் செலுத்தாமையினால் மேற்படி ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ள தென்பதையும்,

(ii) அவ்வாறாயின், மேற்படி ஆசிரியர்களுக்கு எத்தினத்தில் நிலுவைச் சம்பளம் செலுத்தப்படும் என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1146/ '11

3.

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் வரையில் அரசாங்கத்தினால் சைப்பிரசுக்கு அனுப்பப்பட்ட இலங்கையர்களின் எண்ணிக்கை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) இவர்களில், பயிற்றப்பட்ட ஊழியர்கள் மற்றும் பயிற்றப்படாத ஊழியர்களின் எண்ணிக்கை மாவட்ட ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சைப்பிரசுக்கு தொழில்வாய்ப்புக்காக அனுப்பி வைக்கப்படுகின்ற நபரொருவருக்கான விமானப் பயணச்சீட்டின் பெறுமதி யாதென்பதையும்;

(ii) மேற்படி பெறுமதியில் நபரொருவரிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) அரசாங்கம் வழங்கிய பங்கு யாதென்பதையும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1147/ '11

4.

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் வரையில் அரசாங்கத்தினால் லிபியாவுக்கு அனுப்பப்பட்ட இலங்கையர்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்டவர்களில் பயிற்றப்பட்ட ஊழியர்கள் மற்றும் பயிற்றப்படாத ஊழியர்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) லிபியாவுக்கு தொழிலுக்காக அனுப்பப்படும் நபரொருவருக்கான விமான பயணச் சீட்டொன்றின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பெறுமதியில் நபரொருவரிடமிருந்து அறவிடப்பட்ட பணம் எவ்வளவென்பதையும்;

(iii) அரசாங்கம் வழங்கிய பாகம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1148/ ’11

5.

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் வரையில் அரசாங்கத்தினால் ஜப்பானுக்கு அனுப்பப்பட்ட இலங்கையர்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்டவர்களில் பயிற்றப்பட்ட ஊழியர்கள் மற்றும் பயிற்றப்படாத ஊழியர்களின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஜப்பானுக்கு தொழிலுக்காக அனுப்பப்படும் நபரொருவருக்கான விமான பயணச் சீட்டொன்றின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பெறுமதியில் நபரொருவரிடமிருந்து அறவிடப்பட்ட பணம் எவ்வளவென்பதையும்;

(iii) அரசாங்கம் வழங்கிய பாகம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?